# உரிமை

வாராந்த மின்னிதழ்

இதழ்: 295
திகதி: 15-06-2025
மின்னஞ்சல்
urimai2009@gmail.com


## செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள்





## ஆடைகள் களையப்பட்டு பெரும் சித்திரவதைகளை அனுபவித்திருக்கலாம்!!

அருட்தந்தை சத்திவேல் அடிகளார் அதிர்ச்சி (சிறப்புப் பேட்டி)

## தையிட்டி விகாரை கணக்குத் தீர்க்க முயற்சி



சஞ்ஜயன்


## பதவி வெறியர்களின் கூடாரமாக மாறும்



## தமிழ்த் தேசிய அரசியல்

தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் கவலை

# பதவி வெறியர்களின் கூடாரமாக மாறும்



# தமிழ்த் தேசிய அரசியல்

## தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் கவலை

பதவி வெறியர்களின் கூடாரமாகத் தமிழ்த் தேசிய அரசியல் அழிவின் விளிம்பை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகக் கவலை வெளியிட்டிருக்கும் தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் தமிழ்த் தேசிய அரசியலைச் சீர்ப்படுத்தி அந்த 50 ஆயிரம் மாவீரச் செல்வங்களினது தியாகங்களை வீண்போகச் செய்யாது காத்து தமிழ்த் தேசக் கனவினை நனவாக்கிட தமிழ்த் தேசியத்தின் மீது அதீத பற்றுக்கொண்ட இளைஞர்கள் எழுச்சியுடன் ஒன்றுதிரள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வாரந்தோறும் தனது அவதானிப்பு அறிக்கையினை வெளியிட்டுவரும் தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் இந்த வாரம் (15.06.2025) வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது. இது தொடர்பில் தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் வெளியிட்டுள்ள இந்த வார அறிக்கை வருமாறு,

சிறீலங்காவின் தேர்தல் அரசியலானது தமிழர் தேசத்தில் தமிழ்த் தேசிய அரசியலை சிதைத்துப் போட்டிருக்கிறது. சிங்கள இனவெறி அரசு தமிழர் தேசத்தில் எது நடக்கவேண்டும் என காத்திருந்து காய் நகர்த்துகிறதோ அவை ஒவ்வொன்றாக நடந்தேறி வருகிறன. தமிழர் தேசமானது தேசத்திற்கான அரசியலை விட்டு நகர்ந்து தேர்தல் அரசியலுக்குள் தன்னை சேறு பூசிக்கொண்டுவிட்டது. சிறீலங்காவில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலானது முழுமையாக தமிழ்த் தேசிய அரசியலை பதவி வெறியர்களின் கூடாரமாக மாற்றி தமிழ்த் தேசிய அரசியலை அழிவின் விளிம்பினை நோக்கி நகர்த்தியிருக்கிறது.

கடந்த 2024 ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இதுவரை கால தமிழ்த் தேச அரசியல் நிலைப்பாட்டினை மீறி பெருமளவான தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தி எனப்படும் ஜேவிபிக்கு வாக்களித்து அனுர குமார திசாநாயக்கவை தங்கள் மீட்பார் என தலையில் தூக்கிவைத்து ஜனாதிபதியாக்கினர். அதன் விளைவு தொடர்ந்து வந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலும் எதிரொலிக்க மூன்று முட்டாள்களையும் ஒரு பைத்தியத்தையும் வடக்கு மக்கள் தங்கள் பிரதிநிதிகளாக்கி தங்கள் தலையில் மண்போட்டுக் கொண்டனர். இந்நிலையில்தான் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தனியாக உள்ளூராட்சிமன்றத் தேர்தலைச் சந்தித்தாலும் அவை கூட்டாக ஒரு கோரிக்கையை முன்வைத்தன எமது தமிழர் தாயகத்திலிருந்து சிங்கள பேரினவாத சக்திகளையும் அவர்களுக்கு துணைபோகின்ற துரோகிகளையும் துரத்தியடிப்போம் என்று அவர்களின் கைகளில் வடக்கு கிழக்கில் ஒரு சபைகூட வந்துவிடக்கூடாது என மக்களிடம் மன்றாடினர். மக்களும் இந்த ஒற்றைக் கோசத்தில் நீங்கள் ஒன்றாக ஒரு சந்தர்ப்பம் தருகின்றோம் என வடக்கு கிழக்கில் பெருவாரியாக தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்தனர். ஆனால் தேர்தல் முடிந்தபின் தங்கள் சுயநல பதவி ஆசைகளுக்காக பதவி வெறியர்களின் கூடாரமாக தமிழ்த் தேசிய அரசியல் களத்தை மாற்றிவிட்டனர் மக்கள் நம்பி வாக்களித்த இந்த வாக்குப் பொறுக்கிகள்.

தமிழின அழிப்பின் பங்காளியான டக்ளஸ் தேவானந்தாவை யுத்தகாலத்தில் அவரது வதை முகாமாகச் செயற்பட்ட சிறீதர் தியேட்டருக்குச் சென்று சந்தித்துவிட்டு பல்லை இளித்தபடி வெளியே வந்தார் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம். தமிழரசுக் கட்சி தமிழர்களின் துரோகக் கட்சி அது இனத்துரோக அரசியலையே தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது என தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்ததை யாழ் மாநகர சபையில் ஈபிடிபி ஆதரவோடு ஆட்சியைப் பிடித்து நிரூபித்திருக்கிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியியோ புளொட் சித்தார்த்தனோடும் 2009 இற்கு முன் ஈ.பி.டிபி.யில் இருந்து கொலைகளின் பங்காளியான முருகேசு சந்திரகுமாரோடும் கொள்கை உடன்பாடு கண்டிருக்கிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிந்தே ஒரு மாதம் கடந்துவிட்டது. ஆனால் இந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் நித்திரைகளையும் நின்மதிகளையும் தொலைத்துவிட்டு தேர்தல் அரசியலுக்குள் தங்கள் அடிவருடிகளை பதவிக் கதிரைகளில் இருத்தி அழகுபார்க்க இன அழிப்பாளர்களுடனும் இனத்தை காட்டிக்கொடுத்த துரோகக் கும்பல்களுடனும் உடன்படிக்கைகள் செய்துவருகின்றனர். தமிழ் மக்கள் எதற்காக இவர்களை நம்பி நம்பி வாக்களிக்கிறார்களோ அந்த நிலைப்பாட்டில் எந்த வாக்குப்பொறுக்கிகளும் இல்லை என்பதுதான் தமிழர் தேசத்தின் துரயம்.

இன்றைய தமிழ்த் தேசியக் கட்சிகள், மக்கள் நம்பிக்கையைத் துறந்தும், மாவீரர் தியாகங்களை மதிக்காமலும், அதிகாரத்திற்காக மட்டும் ஓடிக்கொண்டு இருக்கின்றன. தமிழீழப் போராட்டம் சுமந்து வந்த ஒரு தேசக் கனவு, இப்போது பதவிக்காக பயணிக்கும் அரசியல்வாதிகளால் முளைநட்ட மண் போல வீணாகியுள்ளது.

உறுதியான தேசப்பற்று, சமூக நீதிக்கான உணர்வுகள், மற்றும் மக்களின் வரலாற்றுப் போராட்டங்களை முன்னிலைப்படுத்த வேண்டிய இந்தக் கட்சிகள், இன்று தங்கள் சொந்த அரசியல் வாழ்வைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கத்தில் இனப்படுகொலையாளிகளுடன் கூட்டணி சேர்ந்து உள்ளூராட்சி ஆட்சியமைப்பில் ஈடுபடுகின்றன. மீண்டும் மீண்டும் மக்களிடம் வாக்குறுதி வழங்கி வெற்றி பெற்ற இக்கட்சிகள், வெற்றிக்குப் பின்னர் மக்களின் உணர்வுகளையும், போராட்டக் கோட்பாடுகளையும் விட்டுவிட்டு,

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# உரிமை
மின்னிதழ்

# சர்வதேச தலையீடு அவசியம்.

செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் தற்செயலாக தோண்டப்பட்ட குழி இன்று, மிகப்பெரிய இனப்படுகொலையின் சாட்சியா மாறியிருக்கிறது.

முதற்கட்டமாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கையில், 19 மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிறு குழந்தைகளின் எலும்புக்கூடுகளும் அடங்கியுள்ளன.

ஆடைகள் கூட இல்லாமல் புதைக்கப்பட்ட அந்த உடல்கள் யாருடையவை ? எப்போது அவர்கள் கொல்லப்பட்டனர்? எப்படி அவர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் என்பனவற்றைக் கண்டறிவதற்கான எந்த தடயங்களும் இதுவரையில் கிடைக்கவில்லை.

அந்த தடயங்கள் கிடைக்கலாம்– கிடைக்காமலும் போகலாம்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் மிகப்பெரியளவிலான படுகொலைகள் நிகழ்ந்திருக்கின்றன என்பதற்கான சாட்சியமாக அது மாறியிருக்கிறது.

ஏற்கனவே, செம்மணி புதைகுழியில் நூற்றுக்கணக்கானோர் புதைக்கப்பட்டதாக கூறப்பட்டிருந்தாலும், அவற்றை தோண்டுவதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தற்போது இந்த மனிதப் புதைக்குழி கண்டறியப்பட்டுள்ள சூழலில் முழு அளவில் செம்மணியில் அகழ்வு பணியை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் சிறலங்காவின் ஆட்சியாளர்கள் ஒருபோதும் அதனை செய்ய போவதில்லை. அவர்கள் யாராக இருந்தாலும் இனப்படுகொலையாளிகளையோ போர்க்குற்றவாளிகளையோ அல்லது மனித உரிமை மீறல் குற்றவாளிகளையோ நீதியின் முன் நிறுத்துவதற்கு தயாராக இருந்ததில்லை. இப்போதைய ஆட்சியாளர்களும் கூட அதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. கடந்த காலங்களில் பல்வேறு மனிதப் புதைக்குழிகள் தோண்டப்பட்டன, ஆனால் அவை எதுவும் முழுமையாக தோண்டி முடிக்கப்படவில்லை. தோண்டியெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்படவில்லை.

அவற்றை அடையாளம் காண்பதற்கோ அல்லது அவர்கள் கொல்லப்பட்டதற்கு காரணமானவர்களை கண்டறிவதற்கோ எந்த புலனாய்வு விசாரணைகளும் முன்னெடுக்கப்படவும் இல்லை.

வெறுமனே ஒரு மனிதப் புதைக்குழி தோண்டப்படுவது, என்பது, அகழ்ந்தெடுக்கப்பட்ட தடயப் பொருட்களை பத்திரப்படுத்துவது, ஆவணப்படுத்துவது போன்ற விடயங்களை தாண்டி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது கடந்த காலங்களில் குற்றமிழைத்தவர்களை நீதியின் முன் கொண்டு வருவதற்கு தடையாக இருந்து வந்திருக்கிறது.

சிறிலங்காவில் ஆட்சியாளர்கள் அவ்வாறு யாரையும் சட்டத்தின் முன்கொண்டு வர விரும்பியதில்லை.

அதனால் அவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்கின்ற நிலை, இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இப்போது கண்டறியப்பட்டுள்ள மனிதப் புதைகுழியை முழுமையாக தோண்ட வேண்டும் என்ற கோரிக்கைகள் பல்வேறு தரப்புகளில் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன.

ஏனென்றால் கடந்த காலத்தில் அரைகுறையாக புதைக்குழிகள் தோண்டப்பட்டு நிறுத்தப்பட்டதால், இதுவும் அப்படி நிறுத்தப்பட்டு விடுமோ என்ற கவலை பரவலாக காணப்படுகிறது.

அதைவிட வெறுமனே இந்த புதைக்குழிகளை தோண்டுவது என்பது ஒரு சம்பிரதாயமான விடயமாக மாறிவிட்டது. ஆனால், இது ஒரு உணர்வுபூர்வமான விடயம். இதனைக் கவனத்தில் கொண்டு நீதியை நிலை நாட்ட வேண்டும். அதற்கு சர்வதேச தலையீடு முக்கியம்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், வரும் 25ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொள்ளவுள்ள சூழலில், இந்த மனிதப் புதைகுழி விவகாரத்தை சர்வதேச மயப்படுத்துவதற்கு நல்லதொரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சர்வதேச மேற்பார்வையில் இந்த புதைகுழியை தோண்டுவதும், விசாரணைகளை முன்னெடுப்பதும், ஒட்டுமொத்த இனப்படுகொலைக்கான நீதிக் கோரிக்கையை மேலும் வலுப்படுத்துவதாக அமையும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கும், அதனை விரைவுபடுத்துவதற்கும் அந்த சர்வதேச தலையீடு அவசியம். இந்த மனிதப் புதைகுழி விவகாரம் சிறிலங்காவின் சட்ட கட்டமைப்புகளுக்குள் சிக்கிக் கொள்ளாமல் அதற்கு வெளியே கொண்டு செல்லப்படும் போது தான், நீதிக்கான கதவுகளை திறக்க முடியும். அதற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வது தான் புத்திசாலித்தனமானதாக இருக்கும்.

ஆசிரியர்

# நீங்கள் மனிதப் புதைகுழிகளை பார்வையிட வேண்டும்

## ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை



இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் உடலங்கள் புதைக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகளை நீங்கள் பார்வையிட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் ஆணையாளர் வோல்கர் டேர்க்கிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கையை வடக்கு கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பெண்கள் வலையமைப்புக்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள், சமூக அமைப்புக்கள், வடக்கு கிழக்கு சமூக இயக்கங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கான கடிதமொன்றை வெளியிட்டுள்ளனர். இந்தக் கடிதத்தில் தமிழ் மக்களின் பிர்ச்சினைகள், தமிழ் மக்களுக்கு சர்வதேசத்திடம் காணப்படும் கோரிக்கைகள், தமிழ் மக்களுக்கான உரிமை மற்றும் நியாமான சட்டம் என்பவை தொடர்பில் பலதரப்பட்ட விடயங்கள் குறித்த கடிதத்தில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க், எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பதவியில் உயிர் வாழ்வதே

## தமிழ் அரசியல்வாதிகளின் குறிக்கோள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் விசனம்



தமிழ் அரசியல் வாதிகளின் ஒரே குறிக்கோள் பதவியில் உயிர்வாழ்வதே. அவர்கள் எந்த தொலைநோக்கு பார்வையும் இல்லாதவர்கள். இதனால் நாங்கள் அவர்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லை என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது. வவுனியாவில் நேற்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினர். போரின் இறுதிக் கட்டத்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# கோடீஸ்வரர்களாக மாறிய சிறீலங்காவின் சிறைச்சாலை அதிகாரிகள்

## வெளியாகும் அதிர்ச்சித் தகவல்கள்



சிறைச்சாலை திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் பெரும் கோடீஸ்வரர்களாக மாறியுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பிரதானிகளது சொத்து விபரங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழு மற்றும் குற்ற விசாரணைப் பிரிவு என்பன நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் சொத்துக்களைக் குவித்து சொகுசு வாகனங்கள், ஆடம்பர வீடுகள் போன்றவற்றை திடீரென கொள்வனவு செய்து கோடீஸ்வரர்களாக மாறியுள்ள அதிகாரிகள் தொடர்பில் இவ்வாறு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திடீரென செல்வந்தர்களாக மாறிய அதிகாரிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பல்வேறு அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் செய்துள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணை முன்னெடுக்கப்பட உள்ளது.

சிறைச்சாலை பிரதானிகளின் வீடுகள், வங்கிக் கணக்குகள் மற்றும் காணிகள் என்பன தொடர்பில் நீதிமன்றின் உத்தரவின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அனுர ஆட்சியிலும் கஞ்சாவால் அழியும் யாழ்ப்பாணம்



பொன்னாலை காட்டுப்பகுதியூடாக கஞ்சா கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டு 240 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

அத்துடன் மாதகலைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது. நேற்று சனிக்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னரும் பொன்னாலை இளைஞர்கள் இதேபோன்ற கஞ்சா கடத்தல் ஒன்றை முறியடித்து பெருந்தொகை கஞ்சாவை கைப்பற்றி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் தொடரும் அதிர்ச்சிச் சம்பவம்!! ஹெலிகாப்டர் விபத்து, அனைவரும் பலி






இந்தியாவில் உத்தரகாண்ட் மாநிலம் கவுரிகுந்த் அருகே இன்று காலை இடம்பெற்ற ஹெலிகாப்டர் விபத்தில் அதில் பயணம் செய்த ஏழு பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

டேராடூனில் இருந்து கேதார்நாத் நோக்கிச் சென்ற ஹெலிகாப்டர் காணாமல் போனதை தொடர்ந்து, ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதை உத்தரகாண்ட் சட்டம் மற்றும் ஒழுங்கு கூடுதல் இயக்குநர் ஜெனரல் (ஏடிஜி) முருகேசன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதில் விமானி உள்ளிட்ட ஆறு பணிகள் (ஐந்து பெரியவர்கள் ஒரு குழந்தை) மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஏஎன்ஐ செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தின் மேல் இமயமலைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு முக்கிய புனிதத் தலமான கேதார்நாத்துக்கு ஹெலிகாப்டர் சென்று கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நடந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை. இந்நிலையில், விபத்துக்குள்ளான ஹெலிகாப்டரை தேடும் மற்றும் மீட்புப்பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் ஏர் இந்தியா விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்த துயர சம்பவம் இடம் பெற்றிருந்தது.

இந்த விமான விபத்து காரணமாக இதுவரை 279 பேர் உயிரிழந்துள்ளதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தற்போது ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும், அதிலிருந்த அனைவரும் உயிரிழந்துள்ளதாகவும் செய்திகள் இந்திய மக்கள் மத்தியில் மிகபெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள்





# ஆடைகள் களையப்பட்டு பெரும் சித்திரவதைகளை அனுபவித்திருக்கலாம்!!

## அருட்தந்தை சத்திவேல் அடிகளார் அதிர்ச்சி (சிறப்புப் பேட்டி)

செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள் ஆடைகள் களையப்பட்டு பெரும் சித்திரவதைகளை அனுபவித்திருக்கலாம் என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் உரிமை பத்திரிகைக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.அவரது பதில்களை முழுமையாகத் தருகின்றோம்.

**செம்மணியில் மீண்டும் மனிதப் புதைகுழி ஒன்று தோண்டப்பட்டு வருகிறது இதனால் தமிழ் மக்கள் அனைவரும் உறைந்துபோயுளார்கள் இது பற்றி உங்களின் அவதானிப்பு?**

கிரிசாந்தி குமாரசாமி எனும் பள்ளிக்கூட மாணவி பாலியல் வல்லுறக்கு உட்படுத்தபட்டு சிறீலங்கா இராணுவத்தினரால் திட்டமிட்டு கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட விடயம் தெரியாமல் அப்பிள்ளையை தேடிச் சென்ற தாய் , சகோதரர் மற்றும் அயல் வீட்டைச் சேர்ந்த ஒருவர் மற்றும் கிருசாந்தி உள்ளிட்ட நான்கு பேரும் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 1996 ஆம் ஆண்டு நடந்த வழக்கு விசாரணையின் போதே இப்பாரிய சமூகப் புதைகுழி தொடர்பான விடயம் வெளிச்சத்திற்கு வந்தது.

இதுவே தமிழர் தாயகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதும்; சிறீலங்கா இராணுவம் தமிழர்களை கொன்று குவித்துவமாக கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது சமூகப் புதைகுழி என்றும் கூறலாம். அதே ஆண்டு இந்திய இராணுவ காலத்துக் குரிய சமூகப் புதைகுழி யாழ்/ துரையப்பா விளையாட்டரங்கு பகுதியில்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்




**தற்போது மீண்டும் செம்மணி சமூகப் புதைகுழி தோண்டப்படுகையில் கண்டுபிடிக்கப்படும் தனி மற்றும் கூட்டு மனித எச்ச தொகுதிகளை அவதானிக்கையில் அவ் உயிர்கள் அடைந்த வேதனை என் நெஞ்சை நெகிழ வைப்பதோடு இலங்கையின் இனப்படுகொலை சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கத்தையும் அதன் கூலிப்படையான இராணுவத்தின் கோர தாண்டவத்தை சர்வதேச சமூகம் உணரும் என நினைக்கிறோம்.**

# நான் செம்மணிப் புதைகுழியில் இருந்து கிருசாந்தியின் ஆத்மா எழுதுகின்றேன்.





## அன்பான தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளே, உள்ளூராட்சி சபைகளில் தெரிவுசெய்யப்பட்ட உறவுகளே



நான், கிருசாந்தி குமாரசாமி பேசுகிறேன். என்னை எமது தாயகத்தில் வாழும் தமிழ்ச் சொந்தங்கள் மறந்திருக்கமாட்டீர்கள் என்று நினைக்கின்றேன். கொழும்பின் நிகழ்ச்சிநிரலுடன் எமது மண்ணில் அரசியல் உளவாளிகளாக வலம் வருபவர்களுக்கு ஒருவேளை என்னைத் தெரியாமல் இருக்கலாம் ஆனால் நீதியின் வழியே வாழும் அத்தனை ஈழத் தமிழர்களுக்கு என்னை நன்கு தெரியும்.. ஏனெனில் தினந்தினம் நீங்கள் செம்மணி வீதியால் பயணிக்கின்றபோது என்னுடையதும் என்போன்று இங்கு புதைக்கப்பட்ட அறுநூற்றுக்கு மேற்பட்ட உறவுகளினதும் நினைவுகள் ஏதோ ஒரு கணத்தில் எங்களை நினைக்கச் செய்யும் என்று நம்பித்தான் இந்தக் மடலை எமது அடுத்த சந்ததிக்கும் எமது நிலைமை வந்துவிடக்கூடாது என்பதற்காகத் தான் இந்த அவசர கடிதத்தை வரைகின்றேன்.

இனவெறி அரசின் சிங்களத் தேசியத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேலைகளில் நீங்கள் அனைவரும் மூழ்கியிருந்த போது தான் 29 வருடங்களுக்கு பின் 1996 இல் என்னையும், எனது இனத்தையும் கொன்று புதைக்கப்பட்ட உறவுகளின் எலும்புக்கூடுகள் செம்மணி சித்துபாத்தி இந்துமயாணத்தில் புதைந்து கிடப்பதாக வெளியுலகிற்கு தெரியவந்தது. அப்போது நீங்கள் தேர்தல்ப் பிரசார வேலைகளில் அதீத ஈடுபாட்டில் இருந்ததால் எங்களைப் பற்றி உரையாடிக் கொள்ளக்கூட உங்களுக்கு நேரம் இருந்திருக்காது என்பதை நான் அறிவேன்.

தேர்தலிகளில் வென்ற நீங்கள் தற்போது சபைகளின் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்காக இரவு பகலாக உணவுமின்றி சரியான தூக்கமுமின்றி மிகவும் களைப்படைந்து போயிருப்பீர்கள் உங்களுக்கு பக்கபலமாக வடக்கு கிழக்கெங்கும் பல புதிய உறுப்பினர்களை உருவாக்கிவிட்டிருக்கிறீர்கள்.

முன்னணியின் வழக்கறிஞர் சுகாஸ் அண்ணா கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் மேதினக் கூட்டமொன்றில் உரையாற்றும்போது எங்களிடம் 72 புள்ளட்கள் இருக்கின்றன அவற்றைக்கொண்டு நாங்கள் செய்யவேண்டிய எல்லாவற்றையும் செய்வோம் என்றார். இப்போது வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள கட்சிகள் அனைவரிடமும் சேர்த்தால் ஐந்நூற்றிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் தேர்தல் திருவிழாக்கள் முடிந்த பின்னராவது அடுத்த மாகாணசபைக்கு ஆயத்தம் செய்வதற்கு முன் எங்களை ஒருகணம் நினைவில் கொள்ளுங்கள் என உங்களை உரிமையோடு கேட்டுக்கொள்கின்றேன்.

என்னை சிங்களக் காடையர்கள் வதை செய்து சப்பாத்துக் கால்களால் எனது கழுத்தை நெரித்துக் கொன்ற வலியின் கதறல் இன்னமும் செம்மணியில் ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றது. என்னோடு படுகொலை செய்யப்பட்ட எனது குடும்பத்தினர் மற்றும் அப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட அறுநூற்றுக்கு மேற்பட்ட மக்களது கதறல் ஒலிகள் இன்னமும் செம்மணி முழுவதும் நிறைந்திருக்கிறது.

கஜேந்திரகுமார் அண்ணா எமக்காக நீங்கள் நேர்மையோடும், ஆளுமையோடு பேசுவது நம்பிக்கையளிக்கிறது அதேபோலவே நீங்கள் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்து சில தரப்புக்களை இணைப்பதற்கு அல்லும், பகலும் உழைத்தீர்கள் எங்களுக்காக ஒரு சில மணித்துளிகளை ஒதுக்கி புள்ளெட்டுக்களோடு களமாடுவீர்கள் என்று நம்புகின்றேன்.

சி.வி.கே ஐயா நீங்கள் தினமும் மாகாண சபைக்கு இந்த செம்மணி வீதியால் தானே போய்வருவீர்கள் எப்படி ஐயா எம் இனத்தைக் காட்டிக்கொடுத்த துரோக எட்டப்பனின் கொலைக்களம் அரங்கேறிய சிறீதர் தியேட்டர் அலுவலகம் சென்று பதவிக்காக விலைபேச முடிந்தது?

உங்களுக்கு பதில்த் தலைவர் பதவி இனப்படுகொலைக்கு துணைபோனவனை பிணை எடுக்க சென்ற பாவத்தை செய்ய எப்படி மனம் வந்தது. சுரேஸ் மாமா,செல்வம் மாமா,மணி அண்ணா, விக்கி ஐயா நீங்கள் எல்லோரும் உரிமையுடன் கூடிய அபிவிருத்தி என்று கோசங்கள் எழுப்பியே தேர்தல் அரசியலில் நிற்கிறீர்கள் நீங்கள் கூறி வாக்குக் கேட்டது போல உரிமைக்கு முதன்மையளித்து, இனப்படுகொலைக்கு நீதி வேண்டி ஐ.நா ஆணையாளர் நமது யாழ்ப்பாணத்திற்கு வரும்போது சர்வதேசத்தின் பார்வை எம்மீது விழும்வகையில் பாரிய போராட்டத்திற்கு தயாராகுவீர்கள் என்று நம்புகிறேன். ஆனால் அந்த சுமந்திரன் அங்கிளை மட்டும் மகஜர் கொடுக்க விடாதீங்கோ அவர் இனப்படுகொலை நடக்கவில்லை எண்டு சொல்லி சிங்கள தேசத்தை காப்பாற்றுவார்.

அண்மையில் சித்துபாத்தி இந்து மாயானத்தில் மீட்கப்பட்ட உடலங்கள் ஆடைகள் ஏதுமின்றி மீட்கப்பட்டிருந்தன. அவர்களும் என்னைப் போலவே நீர்வாணமாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருப்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். அவர்களில் பச்சைக் குழந்தைகள் கூட ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டிருகிறார்கள் அந்த குழந்தைகளின் அழுகுரல்கள் எனது வலியை விட கொடுமையானதாகவே உணர்கிறேன்.

செம்மணியில் சிங்களக் கடையார்களால் துடிக்கத், துடிக்க குற்றுயிராக புதைக்கப்பட்ட எங்களை உங்கள் குடும்பத்தில் ஒருவராக நினைத்து எமக்காக போராட மாட்டீர்களா? தேர்தல் காலங்களில் நீங்கள் ஒவ்வொருவரின் கடுமையாக உங்களின் வெற்றிகாக்க பலரை ஒருங்கிணைத்து தமிழ்த் தேசியம் என்ற கோசத்துடன் அதேபோலவே எமது தலைமுறையினருக்காக தமிழ் மக்களை இனிமேலாவது அணிதிட்டி போராடுவீர்களா? நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சேர் அவர்களே நீங்கள் முன்னாள் பாடசாலை அதிபர் என்பதையும் கடந்து என்னையும் உங்களின் மகளாக நினைத்து பாருங்கள். தேர்தலில் கிளிநொச்சி மக்கள் உங்களுக்கு தந்த முழுமையான வெற்றியை அறவழியிலான போராட்டத்திற்கானதாக மாற்றுவீர்களா?

தமிழ் மக்களின் நீதிக்கான போராட்ட்ங்களில் காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் பாதிக்கப்பட்ட தாய்மார்களும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் சில தமிழ்த் தேசிய செயட்பாட்டாளர்களும் தான் மீண்டும், மீண்டும் போராட்டக்களத்திற்கு வந்து எமது நீதிக்கான குரலை உயிர்ப்போடு வைத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கின்றேன். எதிர்வரும் யூன் 24 ஆம் திகதி ஐ.நா ஆணையாளர் யாழ்ப்பாணம் வருகை தரவிருக்கிறார். நீங்கள் அவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் எங்களுக்காக ஒரு நாளை ஒதுக்கி செம்மணியில் உலகம் திரும்பிப்பார்க்கும் அளவிற்கு மக்களை அணிதிரட்டி மாபெரும் போராட்டத்தை முன்னெடுப்பீர்களா?

உங்களின் செயல்கண்டு அடுத்த மடலில் சந்திக்கிறேன். இப்படிக்கு உங்கள் குடும்பத்தில் ஒருத்தியான கிருசாந்தினி



# தையிட்டி விகாரை கணக்குத் தீர்க்க முயற்சி

சஞ்ஜயன்

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரை தொடர்பான பிரச்சினையை, நீண்டு செல்ல விட முடியாது என்றும், குறுகிய காலத்துக்குள் இந்த பிரச்சினையை அரசாங்கம் தீர்க்கப் போவதாகவும், சிறிலங்காவின் அமைச்சர் சந்திரசேகர் கூறியிருக்கிறார்.

அப்படியானால், அவர் அல்லது அவரது அரசாங்கம் இந்த பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வை- அதாவது காணி உரிமையாளர்களுக்கு அந்த காணிகளை பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு தீர்வை, வழங்க தயாராக இருக்கிறதா? நிச்சயமாக இல்லை.

தேர்தலுக்கு முன்னர் தையிட்டியில் பொதுமக்களின் காணிகளை அபகரித்து, விகாரை அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், அந்த மக்களுக்கு நியாயமான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்றும், வாக்குறுதி கொடுத்திருந்தது தேசிய மக்கள் சக்தி.

ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் அந்த கட்சியினதும் அரசாங்கத்தினதும் நிலைப்பாடுகள் மாற்றமடைந்து விட்டன.

இந்த பிரச்சினையை எப்படியாவது தீர்த்து வைக்க வேண்டும் என்பதற்கு அவர்கள் ஒரே ஒரு வழிமுறையை மாத்திரமே தெரிவு செய்திருக்கிறார்கள்.

காணி உரிமையாளர்களுக்கு நட்டஈட்டை பெற்றுக் கொடுப்பது அல்லது மாற்றுக்காணிகளை பெற்றுக் கொடுப்பது தான் அது.

அவர்களின் இறுதியான தீர்வு இதுவேயாகும். இது ஏற்கனவே அவர்களால் தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்று. தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நடந்த முதலாவது யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம், கேள்வி எழுப்பப்பட்டது.

ஆனால் வடக்கின் ஆளுநர் வேதநாயகன் இதுபற்றி காணி உரிமையாளர்களுடன் பேசி வருவதாகவும் அவர்களுக்கு மாற்று காணிகளை வழங்குவது பற்றி பேச்சு நடத்துவதாகவும் , கூறி பிரச்சினையை திசை திருப்பினார். அதற்குப் பின்னர் இந்த விவகாரம் தீவிரமடைந்து, கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பின்னடைவை சந்திப்பதற்கு,

தொடர்ச்சி 8ஆம் பக்கம்



# படுகொலை செய்யப்பட்ட இசைப்பிரியா பாலச்சந்திரனுக்கும் நீதி வேண்டும்

சிறீலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட இசைப்பிரியா மற்றும் பாலசந்திரன் ஆகியோருக்கு நியாயமான தீர்வை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என தெரிவித்து சட்டத்தரணி தனுஷ்க ரனாஞ்சக கஹந்தகம குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவுசெய்துள்ளார்.

முறைப்பாட்டை பதிவு செய்ய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்கப்படும் என கூறியே அனைத்து அரசாங்கங்களும் பதவிக்கு வருகின்றன. பதவிக்கு வந்ததும் அதனை அடியோடு மறந்து



விடுகின்றனர். இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க சாட்சியங்கள் இல்லை என கூறப்படுகிறது.

இது மறுக்கப்படவேண்டிய ஒன்று.

சிறீலங்கா இராணுவத்திடம் சரணடைந்த இசைப்பிரியா மற்றும் பாலச்சந்திரன் ஆகியோர் கொல்லப்பட்டனர்.அதற்கு தகுந்த ஆதாரங்களும் சாட்சியங்களும் காணப்படுகின்றன.

இருப்பினும் இவர்களது குடும்பத்தார் சாட்சியமளிக்க முன்வராமல் உள்ளனர். மேலும் அவர்களது குடும்பத்தில் உள்ள எவரும் உயிருடன் இல்லை என கூறப்படுகிறது.

மேலும் பாலச்சந்திரனை பற்றி அனைவருக்கும் தெரியும். அவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் இளையமகனாவார். அவரும் இராணுவத்தால் கொல்லப்பட்டார்.

இந்த அத்துமீறல்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். வடக்கு மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்றால் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தினை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

---

8 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## தையிட்டி...

இதுவும் ஒரு காரணமானது. ஆனாலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமின்றி செயற்படவே முனைகிறது.

அது சிங்கள பௌத்த அரசாங்கம் என்ற ரீதியிலேயே இந்த பிரச்சினையை கையாள முனைகிறது.

தமிழ் மக்களின் காணிகளில் அடாத்தான முறையில்- சட்டத்துக்கு புறம்பான வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த விகாரைக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் பிரச்சினையை தீர்ப்பது தான் அதன் அணுகுமுறை.

அப்படியானால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு -காணி உரிமையாளர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்காது என்பதே அதன் அர்த்தம்.

காணி உரிமையாளர்களுக்கு அவர்களின் ன காணிகளை பெற்றுக் கொடுப்பதுதான் நியாயமான தீர்வு.

அந்த நியாயமான தீர்வு அரசாங்கத்தினால் வழங்கப்படமாட்டாது -வழங்கப்பட முடியாது என்பது தெளிவான விடயம்.

அது இப்போது, கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தப்பட்டு வருகிறது.

சில வாரங்களுக்கு முன்னர், மத விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் இந்த கருத்தை கூறியிருந்தார்.

இப்பொழுது அமைச்சர் சந்திரசேகரும் அதே கருத்தை கூறியிருக்கிறார்.

மாற்று காணிகள் அல்லது இழப்பீடு இந்த இரண்டில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக, காணி உரிமையாளர்கள் தமது வாய்களை பொத்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதே, இந்த அரசாங்கம் வழங்குகின்ற தீர்வு.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது, தாங்கள் இனவாத அல்லது மதவாத ஆட்சியை நடத்தப் போவதில்லை என்றும், எல்லோரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையிலேயே ஆட்சியை கொண்டு செல்ல போவதாகவும் கூறியது.

ஆனால், தமிழர்களுக்கு அல்லது முஸ்லிம்களுக்கு அரசாங்கம் நியாயமான எந்த உரிமைகளையும் வழங்கியிருக்கவில்லை.

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளோ பிரதி அமைச்சு பதவிகளோ அல்லது வேறு துறை சார்ந்த பதவிகளிலோ இன விகிதாசாரம் பேணப் படவில்லை.

பெரும்பான்மை சிங்களவர்களே தமிழர்களை ஆட்சி செய்யும் வகையில் கட்டமைப்புகளை உருவாக்குவதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது.

இந்த கட்டமைப்புக்கள் தமிழர்களை இரண்டாம் தர குடிமக்களாக -சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களுக்கு அடிபணிந்தவர்களாக -நீடித்திருக்க செய்யும் வகையிலேயே செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

இது காலம் காலமாக இருந்து வருகின்ற, சிங்கள பௌத்த மேலாதிக்க வாதத்தின் தொடர்ச்சியே ஆகும்.

ஆனால் இது ஒரு வேறுபட்ட வடிவத்தில் தமிழர்களின் மீது நாசகார திட்டத்தை முன்னெடுக்கிறது.

முன்னர் தமிழர்களுக்கு எதிரான இனஅழிப்பை- தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை- தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை- ஆட்சியில் இருந்த சிங்கள பௌத்த பேரினவாதிகள் வெளிப்படையாக முன்னெடுத்தார்கள்.

அவர்கள் வெளிப்படையாக இனவாதம் பேசினார்கள், தமிழர்களை இழிவுபடுத்தினார்கள், தமிழர்களுக்கு எதிராக விரோதமான கருத்துக்களை பிரசாரம் செய்தார்கள்.

ஆனால் இப்போதைய ஆட்சியாளர்கள் அப்படி இல்லை. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல யாருக்கும் தெரியாமல் இனவாதத்தை ஊட்டி வளர்க்கிறார்கள்.

இந்த இனவாத பூதம் தமிழர்களை கொஞ்சம் கொஞ்சமாக நாசம் செய்யும். ஆனால் அது வெளியே யாருக்கும் தெரியாது.

தமிழர்களும் இந்த அரசாங்கத்தை நம்பி இனவாதமற்ற அரசு என்று நம்பி தங்களுக்கு தெரியாமலேயே ஏமாந்து போகின்ற நிலையே தொடர போகிறது . அத்தகைய ஒரு சதித்திட்டத்துடன் தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். செயற்பட்டு வருகிறது

தையிட்டி விகாரை விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களின் கருத்துக்களையோ அவர்களின் நிலைப்பாடுகளையோ அறிந்து கொள்வதற்கு முற்படவில்லை.

தமிழ் மக்களின் நிலங்களில்- தமிழ் மக்கள் முற்றிலும் வசிக்கின்ற பிரதேசத்தில்- பௌத்தர்களை வசிக்காத ஒரு இடத்தில்- சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை கட்டி காப்பாற்றுவதிலேயே அது குறியாக இருக்கிறது. இந்த விகாரையை அகற்றுவது சிங்கள மக்கள் மத்தியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கவலைப்படுகின்ற அளவிற்கு, தமிழ் மக்களுக்கு அதனால் ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்களைப் பற்றி அரசாங்கம் சிந்திக்கவில்லை.

ஏற்கனவே இதுதான் தீர்வு என்று தீர்மானிக்கப்பட்ட நிலையிலேயே, தையிட்டி விகாரை தொடர்பாக ஆலோசனைகளை பெறுவதற்கு குழுக்கள் அமைக்கப்பட்டன.

இவ்வாறான குழுக்கள் வெறுமனே மக்களின் காதில் பூச்சுற்றுவதற்கான வேலையே ஆகும்.

அரசாங்கம் தான் நினைத்ததை செயற்படுத்துவதிலேயே குறியாக இருக்கிறது.

இப்பொழுது தமிழர் பிரதேசத்தில் சிங்களவர்களை கொண்டு வந்து- தமிழர்களுக்கு எதிராக போராட்டம் நடத்துகின்ற அளவிற்கு நிலைமைகள் செல்லத் தொடங்கி இருக்கின்றன.

இத்தகைய சூழலை உருவாக்கி விட்டது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமே.

இதற்கு முன் இரண்டு ஆண்டுகளாக இந்த எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் இவ்வாறான நிலை ஏற்படவில்லை.

தென்பகுதியில் இருந்து சிங்களர்களைக் கொண்டு வந்து தமிழர்களுக்கு எதிராக போராட்டத்தை தூண்டி விடுகின்ற முயற்சிகளுக்கு தற்போதைய அரசாங்கமும் துணை போகிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படையாக இனவாதம் பேசவில்லை என்று கூறிக் கொண்டாலும் உள்ளூர அது தமிழர்களுக்கு விரோதமான ஆட்சியை முன்னெடுக்கிறது.

அத்தகையதொரு ஆட்சியில் தமிழர்களும் பங்காளிகளாக இணைந்து கொண்டது தான் கேவலமானது.




## பட்டலந்த அறிக்கை வரிசையில்


# செம்மணி மனிதப் புதைகுழி

# NPP அரசாங்கத்தின் கவனத்தைப் பெறுமா!

ஐ.வி.மகாசேனன்

பல நாடுகளிலும் நிலத்தை தோண்டுகையில் கனிம வளங்களும், பெற்றோலியமும், குடிநீருமே கிடைக்கப் பெறுகிறது. இலங்கையின் வடக்கு-கிழக்கில் வீதி அபிவிருத்தி, மயான அபிவிருத்தி என அபிவிருத்தி திட்ட அத்திவாரப் பணிகளுக்கு நிலத்தை தோண்டுகையிலேயே தொகை தொகையான மனித எலும்புக் கூட்டு எச்சங்களே கிடைத்து வருகின்றது. சமுக வலைத்தளம் என்ற போர்வையில் இணையத்தால் உலகம் சுருங்கியுள்ள இன்றைய காலகட்டத்தில், காசாவிலும் உக்ரைனிலும் மக்கள் தொகையாக மரணித்து கிடக்கும் பிரேத காட்சிகள் உலக மக்களை உருக்கியுள்ளது. சாமாந்தரமான காலப்பகுதியில் ஈழத்தமிழர்களின் என்புக்கூடுகள் கூட்டாக அணைத்தவாறும், ஒன்றாக இணைந்தவாறும், சிறுவர்களினாதாகவும் காட்சிகளாகிறது. எனினும் உலக மக்களிடமோ குறைந்தபட்சம் இலங்கைக்குள்ளேயோ போதிய கவன ஈர்ப்பை பெறவில்லை என்ற சந்தேகங்கள் காணப்படுகின்றது. கூட்டு என்புத் தொகுதிகளின் கண்டுபிடிப்பும் அதனை மையப்படுத்தி எழும் செய்திகளும், ஈழத்தமிழர்கள் மீதான தென்னிலங்கை அரச பயங்கரவாதத்தின் காட்டுமிராண்டித்தனமான இனப்படுகொலைக்கான ஆர்வத்தை தோலுருக்கிறது. எனினும் இதன் முக்கியத்துவம் ஈழத்தமிரசியலில் இனங்காணப்பட்டுள்ளமையை அரசியல் மற்றும் சிவில் தரப்பினரிடம் அறிய முடியவில்லை. இக்கட்டுரை

> குற்றம் நிரூபிக்கப்பட்ட இராணுவத்தினரின் ஒப்புதல் வாக்குமூல வெளிப்பாடுகளைத் தொடர்ந்து கணிசமாக அதிகரிக்கப்பட்ட சர்வதேச மற்றும் உள்ளூர் அழுத்தங்களுக்கு பதிலளிக்கும் விதமாகவே இலங்கை அரசாங்கமும் புதைகுழிகளை ஆராய்வதற்கான முன்முயற்சிகளுக்கு இணங்கியது.



செம்மணி மனிதப் புதைகுழிக்கு பொறுப்புக்கூற வேண்டிய அவசியம் இலங்கை அரச இயந்திரத்தின் கரமான அரசாங்கத்திற்கு காணப்படுகின்றமையை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் 1990களின் இறுதியில் அடையாளம் காணப்பட்ட தொன்றாகும். 1996ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் யாழ்ப்பாண தீபகற்பம் கைப்பற்றப்பட்ட பின்னர் 600 பேர் காணமால் போயுள்ளதாக 1997-நவம்பரில் சர்வதேச மன்னிப்புச் சபை செய்தி வெளியிட்டிருந்தது. செம்மணி விவகாரம் 1996 செப்டெம்பரில் செல்வி கிருஷhந்தி குமாரசாமி என்ற படசாலை மாணவி இலங்கை இராணுவத்தால் கூட்டு வன்புணர்வுக்கு உட்பட்டு படுகொலை செய்யப்பட்டதுடன், கிருஷhந்தியை தேடிச் சென்ற அவரது உறவினர்களையும் படுகொலை செய்து புதைத்த சம்பவத்துடன் தொடர்புகின்றது. கிருஷhந்தி படுகொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து இராணுவத்தினர்களில் ஒருவரான சோமரத்ன ராஜபக்ஷ செம்மணியை மனிதப் புதைகுழியின் ஆதாரமாக 1998ஆம் ஆண்டு தனது ஒப்புதல் வாக்கு மூலத்தில் வெளிப்படுத்தியிருந்தார். சோமரத்ன ராஜபக்ஷவின் ஒப்புதல் வாக்குமூலத்தில், 'மேலதிகாரிகளால்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

5 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## செம்மணியில்...

கண்டுபிடிக்கப்பட்டதையும் குறிப்பிடல் வேண்டும்.

கிரிசாந்தி குமாரசாமி வழக்கு விசாரணை காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த சந்திரிக்கா அரசாங்கம் சமூகப் புதைகுழியினல மூடி மறைப்பதற்கும், குற்றம் சாட்டப்பட்ட பாதுகாப்பு தரப்பினரை பாதுகாக்கவும் முற்பட்டதாக கூறப்படுவதோடு, சர்வதேச அழுத்தம் காரணமாகவே வழக்கு தொடுத்து இவ்வழக்கு நடந்து கொண்டிருக்கையில் சமூகப் புதைகுழி பிரதேசத்தை அகழ்ந்து இரவாக, இரவாக அகழந்து அங்கிருந்து எச்சங்களை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

சந்தேக நபர்களுக்கு பாதுகாப்பு இல்லை என் காரணம் கூறப்பட்டு வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மாற்றப்பட்டது ஆனால் காவல்துறையினரின் போதுமான அளவு ஒத்துழைப்பு இன்மை காரணமாக 2006 ஆம் ஆண்டு வழக்கு நிறைவுக்கு வந்தது. வழக்கினை முன்னெடுத்துச் செல்லவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்காத சிங்கள பௌத்த காவல்துறை கட்டமைப்பும் குற்றப் பொறுப்பினை ஏற்க வேண்டும்.

இவ் வழக்கு முடிவுக்கு வந்ததும் குற்றச்சாட்டப்பட்ட படை தரப்பினர் இடமாற்றத்தோடு பதவி உயர்த்தப்பட்டு சமூக கௌரவத்திற்கு உரியவர்களாக்கப்பட்டனர். சமாதானப் புறாவான சந்திரிகா குற்றவாளிகளுக்கு கொடுத்த தண்டனை இதுவா?

தற்போது மீண்டும் செம்மணி சமூகப் புதைகுழி தோண்டப்படுகையில் கண்டுபிடிக்கப்படும் தனி மற்றும் கூட்டு மனித எச்ச தொகுதிகளை அவதானிக்கையில் அவ் உயிர்கள் அடைந்த வேதனை என் நெஞ்சை நெகிழ வைப்பதோடு இலங்கையின் இனப்படுகொலை சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கத்தையும் அதன் கூலிப்படையான இராணுவத்தின் கோர தாண்டவத்தை சர்வதேச சமூகம் உணரும் என நினைக்கிறோம். அத்தோடு, வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் நீதி கோரிக்கை நியாயமானது என்பது சர்வதேசத்துக்கு புலப்படும் எனவும் உணர்கின்றோம்.

**செம்மணி சித்துபாத்தி மயானத்தில் மனித புதைகுழி தோண்டப்பட்டு வரும் நிலையில் செம்மணி பிரதேசத்தில் மேலும் பல மனித புதைகுழிகள் இருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டு இருக்கிறது இது தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

கிரிசாந்தி குமாரசாமி மீதான வல்லுறவு மற்றும் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட கோப்ரல் சோமரத்தின ராஜபக்சேயின் வாக்குமூலத்தில் 400 இற்கும் அதிகமானோர் கொன்று செம்மணியில் புதைக்கப்பட்டதாக அளித்த வாக்கு மூலத்தைத் கூறப்பட்டது. தொடர்ந்து 1996 காலப்பகுதியில் நடந்த அகழ்வாராய்வின் அறிக்கை இந்நாள் வரை வெளிப்படுத்தப்படாமல் இருப்பதன் மூலம் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு வன்கொடுமைகளை மூடி மறைக்க பேரினவாத ஆட்சியாளர் ஒன்றித்து செயல்படுவதை சர்வதேச சமூகம் இனியும் அங்கீகரிக்கக் கூடாது. அக்காலப் பகுதியில் எத்தனை மனிதர் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன? என்பது தெரியாத சூழ்நிலையில் தற்போது 19 பேரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. செம்மணி சமூகப் புதைகுழியை தவிர ஏனைய அனைத்து சமூக புதைகுழிகளும் ஏதோ ஒரு நிர்வாண பணிக்காக நிலம் தோண்டப்படும் போதே அங்கு சமூகப் பகுதிகளுக்கான அடையாளங்கள் தென்பட்டுள்ளன. இதுவரை நாடு முழுவதும் 24 சமூகப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.அவற்றில் 14 சமூகப் புதைகுழிகள் தமிழர் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையுடன் தொடர்புற்றவை. ஏனையவை 1988/89 காலப்பகுதியில் தெற்கில் அரசுக்கு எதிராக எழுந்த சிங்கள இளைஞர்களை கொன்று குவித்த இடங்களே. இவை அனைத்தும் முழுமையாக அகழ்வாராட்சிக்கு உட்படுத்தப்பட வேண்டியவைகளே.

**செம்மணி சித்துபாத்தி மயானத்தில் தோண்டப்படும் மனிதப் புதை குழியில் எலும்புக் கூடுகளைத் தவிர ஆடைகளோ அணிகலன்களோ காணப்பட்டி ருக்வில்லை இதை எப்படி உணர்கிறீர்கள்?**

செம்மணி சித்துபாத்தி மயானத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தனி மற்றும் கூட்டு மனித எச்சங்கள் இருந்த இடங்களில் அவர்களின் ஆடைகள் அல்லது வேறு அணிகலன்கள் கண்டுபிடிக்கப்படாமை பெரும் அச்சத்தையே ஏற்படுத்துகின்றது.

> **மக்கள் விடுதலை முன்னணியினரின் சமூகப் புதைகுழி ஒன்று மாத்தலையில் ரணில்-மைத்திரி ஆட்சி காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு அதற்கு நீதி கேட்டு நாங்கள் வீதி போராட்டம் நடத்தினோம்.**

இவர்கள் கொல்லப்படுவதற்கு முன்னர் ஆடைகள் களையப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்டு பெரும் சித்திரவதைக்கு உள்ளாக்கிய நிலையில் மரணத்தை தழுவியவர்களாக இருக்கலாம். அல்லது உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த நிலையிலேயே குப்பைகளாக வாகனங்களில் ஏற்றப்பட்டு குழிகளுக்குள் தள்ளப்பட்டு உயிரோடு புதைக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம். இது நீண்ட கால திட்டமிடப்பட்ட இனப்படுகொலையின் இன்னுமொரு வடிவமாகவே அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.

இன்னுமொரு விடயம் 1999 ஆம் ஆண்டு செம்மணியில் அகழப்பட்ட இரண்டு மனித எச்சங்கள் அவர்களின் உடைகள் மூலம் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் 1996 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டதாக அவர்களின் உறவுகள் கூறிய நிலையில் அவ்வாறு கைது செய்யப்பட்ட ஒருவருடைய கண்கள் அவருடைய மேலுடையால் கண்கள் கட்டப்பட்டிருந்ததாகவும் மற்றவரின் கைகள் பின்பக்கமாக அவருடைய உள்ளாடையால் கட்டப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது.

**புதைகுழிகளைத் தோண்ட நிதியில்லை போன்ற காரணங்களை கூறி அரசு ஏமாற்ற முனைந்தால் மாற்று ஏற்பாடுகள் இருக்கிறதா? அது குறித்து ஏதாவது ஆராயப்பட்டு வருகிறதா?**

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இதுவரைக்கும் 24 சமூக புதைகுழிகள் கண்டுபிடிக்க ப்பட்டுள்ளன. இவற்றில் 14 தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையுடன் நேரடியாகவே தொடர்புபட்டவை.

இவற்றையெல்லாம் மறைத்துக் கொண்டே இன்றைய ஆட்சியாளர்களும் "இனப்படுகொலை நடந்ததாக எவரும் கூறினால் அவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்" என்று கூறுவது நீதிக்கு மாறான நகைப்பாக உள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியினரின் சமூகப் புதைகுழி ஒன்று மாத்தளையில் ரணில் -மைத்திரி ஆட்சி காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.அதற்கு அதற்கு நீதி கேட்டு நாங்கள் வீதிப் போராட்டம் நடத்தினோம். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியினர் அதற்கு ஒத்துழைப்பு வழங்காதது மட்டுமல்ல அமைதி காத்தனர்.காரணம் சிங்கள பௌத்த இராணுவத்தையும் அவர்களின் உறவுகளையும் பகைத்துக் கொள்ள கூடாது என்பதற்காகவே.

இந்தப் பின்னணியில் இதுவரை அடையாளம் காணப்பட்ட சமூகப் புதைகுழிகளையோ இனிமேல் அடையாளம் காணப்படும் சமூகப் புதைகுழி இடங்களை அகழ்வதற்கோ சர்வதேச நிபுணத்துவ குழுவின் பங்களிப்போடு ஆய்வு செய்வதற்கோ தற்போதைய ஆட்சியாளர் உட்பட எந்தவொரு ஆட்சியாளரும் துணை நிற்கப் போவதில்லை என்பது நிரூபணமான உண்மை.

நவீன தொழில்நுற்பங்களுடன் சமூகப் புதைகுழிகள் கண்டறியப்படவும் அதனை சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் பங்களிப்போடு அகழவும் ஆய்வு செய்யவும் சிறீலங்கா அரசு தனியான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஐ.நா மனித உரிமை பேரவை யூன் மாதம் நடக்கவிருக்கும் கூட்டத்தொடரில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு அவசர நிதி உதவியினையும் நல்குவதற்கு புலம்பெயர் சமூகம் ராஜதந்திர அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும்.

**பெரிய குற்றங்களில் ஈடுபட்டு தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதிகள் ஆள்மாறாட்டத்தின் மூலம் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் இது தொடர்பாகக் கூறுங்கள் ?**

சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் அரசியல்வாதிகள் குண்டர்களை பக்கபலமாக வைத்திருந்த காலம் ஒன்று இருந்தது. 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் குண்டர்களும் பாதாள உலகைச் சார்ந்தவர்களும் நேரடியாக நாட்டின் அரசியலுக்குள் வந்ததோடு அவர்களே அரசியலை தீர்மானிக்கும் சக்திகளாகவும் மாறினர். அத்தோடு ஒருவரை ஒருவர் பாதுகாக்கும் கலாச்சாரம் உருவாகியது. சந்தர்ப்பவசமாக எவராவது அகப்பட்டு சிறைச்சாலைக்கு செல்ல நேர்ந்தால் ஏதோ ஒரு தொழில்நுட்ப காரணங்களை காட்டி வழக்கிலிருந்து விடுதலை செய்வதற்கு ஆட்சியாளர்கள் தயங்கவில்லை. அல்லது தொழில்நுட்ப காரணங்களை உருவாக்கினர். அதுக்கு அப்பாற்பட்ட நிலையில் தான் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை பாவித்து அரசியல்வாதிகளுக்கு வேண்டியவர்கள் வெளியிலே கொண்டுவரப்படுகின்ற கலாச்சாரம் சிறீலங்காவிலே இருந்துள்ளது என்பதற்கு அண்மைய சம்பவங்கள் நல்ல உதாரணமாகும். எனவே நாட்டின் அரசியல் கலாச்சாரமும் அரசியல் செல்நெறியும் மாற்றமடையாத வரை நாட்டிலே அமைதி நிலவப் போவதில்லை.

# உலகையே உலுக்கிய செம்மணி படுகொலை: மீளத் தோண்டப்படும் தமிழர்களின் புதைகுழிகள்!

மூன்றிற்கு மேற்பட்ட மனித உடல்கள் ஒரு இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த இடத்தை “மனிதப்புதைகுழி” என பிரகடனப்படுத்த முடியும் என சர்வதேச சட்டம் பொருள்பட கூறுகின்றது. ஆயினும் சிங்கள ஆட்சியில் மூடி மறைக்கப்பட்ட பல மனிதபுதைகுழிகள் வெளி உலகிற்கு ஒருபோதும் தெரியவரவில்லை.

**உலகையே உலுக்கிய செம்மணி:**

1996 செப். ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவமுகாமிற்குச் சென்ற தாயாரான திருமதி இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினராற் படுகொலை செய்து புதைக்கப்பட்டனர்.

செம்மணியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் கண் துடைப்புக்காக அரசால் தண்டனை வழங்கப்பட்டது. இன்னமும் பல கொலையானவர்களின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதால் தற்போது மீளவும் செம்மணி புதைகுழி தோண்டப்படுகிறது.

> **இந்த மகாபாதக செயலை செய்தவர்கள் எப்படி இலங்கையில் சுதந்திரமாக நடமாட முடியும்?**

**புதைகுழியும் இனப்படுகொலையும்:**

02.05.2025 அன்று செம்மணியில் மேற்கொண்ட அகழ்வின் போது பல மனித மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டன ஆகவே சட்டப்படி செம்மணியை மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த முடியும்.

இந்த செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்கள். அவர்களை கொலை செய்து புதைத்தவர்கள் அரச படையினர். இந்த மகாபாதக செயலை செய்தவர்கள் எப்படி இலங்கையில் சுதந்திரமாக நடமாட முடியும்? இந்த கொலைகாரரை கண்டுபிடித்து அதிகபட்ச தண்டனை வழங்க முடியவில்லை என்பது சிறிலங்கா அரசின் இனவாத போக்கை வெளிக்காட்டுகிறது.

செம்மணி, வீரமுனை, கொக்கட்டிச்சோலை, முள்ளிவாய்க்கால் என தமிழர்களை கொன்று குவித்த வரலாறு இன்னும் பல உண்டு. இலங்கை அரச படைகளால் தமிழர்கள் கொன்று புதைத்தது அவமானகாரமான, அசிங்கமான, அக்கிரமான, கொடூரமான வரலாறு உலகின் பார்வைக்கு இன்னமும் வெளிப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**அதிகாரமும் அவமானமும்:**

ஜெ. ஆர் . ஜெயவர்த்தன காலம் தொடங்கி, பிரேமதாசா போன்றவர்கள் அறுபது ஆயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களை கொலை செய்துவிட்டு நிறைவேற்று அதிகாரத்திற்குள் ஓடி ஒழித்துக் கொண்டனர்.

பின்னர் சந்திரிக்கா குமாரதுங்கா யாழ்ப்பாணத்தில் அப்பாவி தமிழ் மக்கள் பலரை கொலை செய்து செம்மணியில் புதைத்துவிட்டு அவரும் நிறைவேற்று அதிகார போர்வைக்குள் புகுந்து ஒழித்துக்கொண்டார்.

இறுதியில் ராஜபக்சாக்கள் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை சிறுவர்கள் , பெண்கள், முதியவர்கள் என்று பாகுபாடு இன்றி முள்ளிவாய்க்காலில் வைத்து கொன்று குவித்து விட்டு நிறைவேற்று அதிகாரத்தையும், தேசிய வீர்ர்கள் எனவும் தேசிய வெற்றி எனவும் மூன்று அடுக்கு பாதுகாப்பிற்குள் பதுங்கி கொண்டனர் என்பது சிறிலங்காவின் அவமானகரமான வரலாறாகும்.

**சமாதானத்துக்கான போர் :**


ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா 1994இல் புதிதாக ஆட்சியினைப் பொறுப்பேற்ற பின், அவர் தலைமையிலான அரசாங்கம் மனித

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



நவீனன்

# புகழ்பெற்ற ஈழப் புரட்சிப் பாடலை எழுதிய கவிஞர் பண்டிதர் வீ. பரந்தாமன் காலமானார்!



மானம் ஒன்றே வாழ்வெனக் கூறி வழியில் நடந்தான் மாவீரன் அவன் போன வழியில் புயலென எழுந்து போரில் வந்தார் புலி வீரர்...” என்ற புகழ்பெற்ற ஈழப் புரட்சிப் பாடலை எழுதிய கவிஞர் தமிழ் அறிஞர் பண்டிதர் வீ. பரந்தாமன் அவர்கள் நேற்றுக் காலமானார்.

பண்டிதர் பரந்தாமன் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு தமிழறிஞர் ஆவார். இவர் கிளிநொச்சியில் உள்ள பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக் கல்லூரியின் நிறுவனர் ஆவார். மேலும், இவர் எழுதிய “தமிழர் உறவுமுறைச் சொல் வழக்கு அகராதி” என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

கெரில்லாப் போர் விரகுகள் என்ற விடுதலைப் போராட்டம் சார்ந்த முக்கிய நூலையும் இவர் எழுதியுள்ளார். அத்துடன் மனிதரும் கடவுளும் மற்றும் வேர் அடி வழித் தமிழ்ச் சொற்பிறப்பியற் சிற்றகரமுதலி முதலிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார்

# நாகப்பட்டினம் - காங்கேசன் துறைக் கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தமாம்



கடும் காற்றுடன் கூடிய கால நிலை காரணமாக நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையில் இடம்பெற்று வந்த பயணிகள் கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

தமிழக கடற்கரையோரப் பகுதிகளில் இன்றைய தினம் சனிக்கிழமை மற்றும் நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களும் மணிக்கு 35 முதல் 45 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும், எதிர்வரும் 16-ம் திகதி வரை தெற்கு தமிழகக் கடற்கரை, அதனை ஒட்டிய பகுதிகள் மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதிகளில் மணிக்கு 45 முதல் 65 கிலோ மீற்றர் வரை பலத்த காற்று வீசக்கூடும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன் காரணமான எதிர்வரும் 18ஆம் திகதி வரை கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக நாடுகளில் இருக்கும் அணுகுண்டுகளின் எண்ணிக்கை தெரியுமா?

உலகளவில் அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் நாடுகள் பாதுகாப்பு ரீதியிலும் வலிமை வாய்ந்ததாக பார்க்கப்படுகின்றன. தற்போது ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதவதற்கும் அணு ஆயுதம் குறித்த அச்சமே காரணம்.

அணு ஆயுதங்கள் மனித குலத்திற்கே பேரபாயமாக கருதப்படுகின்றன. ஒரே ஒரு அணுகுண்டு ஒரு சில நிமிடங்களில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை பலி வாங்கக்கூடியது. அது மட்டுமல்ல... குண்டு விழுந்த இடத்தை சுற்றி நீடித்திருக்கும் கதிர்வீச்சு தலைமுறை தலைமுறைக்கும் மனிதர்களுக்கு விதவிதமான பாதிப்புகளை கொடுத்துக்கொண்டே இருக்கும். ஜப்பானில் 1945இல் அமெரிக்கா போட்ட குண்டே அணு ஆயுதங்கள் எவ்வளவு கொடூரமானது என்பதற்கு ஒரு உதாரணம். உலகளவில் தற்போது 9 நாடுகளிடம் அணுகுண்டுகள் உள்ளன. ரஷ்யாவிடம் அதிகபட்சமாக 5 ஆயிரத்து 449 அணுகுண்டுகள் உள்ளன. அமெரிக்காவிடம் 5 ஆயிரத்து 277, சீனாவிடம் 600, பிரான்சிடம் 290, பிரிட்டனிடம் 225 அணுகுண்டுகள் உள்ளன. பாகிஸ்தானிடம் 180 அணுகுண்டுகளும் இந்தியாவிடம் 170 அணுகுண்டுகளும் உள்ளன. இஸ்ரேலிடம் 90 அணுகுண்டுகள் உள்ளன. வடகொரியாவிடம் 50 குண்டுகள் உள்ளன. உலகளவில் சுமார் 12 ஆயிரத்து 331 அணுகுண்டுகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அணு விஞ்ஞானிகள் கூட்டமைப்பின் புள்ளிவிவரங்கள் படி இது தெரியவந்துள்ளது.

11 ஆம் பக்கம் தொடர்ச்சி→ **உலகையே உலுக்கிய...**

உரிமைகளை நிலைநாட்டுவதற்காக காணாமற்போனவர்கள் புதைக்கப்பட்ட சூரியகந்த புதைகுழிகள் போன்ற பல புதைகுழிகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியதோடு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தியதாக காட்டிக்கொண்டது.

ஆயினும் “சமாதானத்திற்கான போர்” என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் 1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொன்பதாம் திகதி புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததை தொடர்ந்து போர் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டன. 1995 இன் இறுதிகளில் யாழ் நகரையும், 1996 இன் நடுப்பகுதிகளில் யாழ் குடாநாடு முழுவதனையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

“சமாதானத்துக்கான போர்” மூலம் இராணுவத்தினர் யாழ் குடாநாட்டை 1996இல் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் யாழ் நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்தபோது குடாநாட்டில் கைதாவோர், காணாமற்போவோர் பட்டியல் நாள்தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப்புகளும் அதிகரித்தன.

1996ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் யாழ்குடா முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் இராணுவத்தினர் கொண்டுவந்தனர். இதன் பின் நடந்த கொடூர நிகழ்வுகளால் யாழ் குடாநாடே அதிர்ச்சியில் உறைந்தது.

**ராஜபக்சவின் சாட்சியம்:**

1996 நடுப்பகுதிக்குப் பின்னான ஆறு மாதக் காலப்பகுதியில் காணாமற்போனோர் பட்டியல் எழுநூறிற்கு மேல் அதிகரித்தது. செம்மணி படுகொலை தொடர்பான சாட்சியங்கள் பல பதிவாகின.

செம்மணியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு உயிரிழந்தது தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்களில் “லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச” விசாரணையின்போது கீழ்வருமாறு வாக்குமூலம் அளித்தார். “யாழ்குடாநாட்டில் பரவலாக கைதுசெய்து காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இவர்களின் சடலங்கள் மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் இரவில் எடுத்துச்செல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு. முந்நூறு, நானூறு பேரை புதைத்த புதைகுழிகளை என்னால் காண்பிக்க முடியும் என்றார். இதன்பின்னர் 1999ஆம் ஆண்டில் “லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச” வினால் செம்மணியில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப் பட்டது.

நீண்ட காலத்தின் பின்னர் மீளவும் செம்மணி புதைகுழிகள் தோண்டப்பட்டாலும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எவருக்கும் இல்லை. காலம் பல கடந்தும் இன்றுவரை செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக எந்தவிதமான இறுதி முடிவினையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேற்கொள்ளவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

**புதைகுழிக்கு நீதிகோரி போராட்டம் :**

செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் யாழில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை தாங்கி “செம்மணி புதை குழிக்கு நீதி வேண்டும், மறைக்காதே மறைக்காதே புதை குழிகளை மறைக்காதே, எங்கே எங்கே உறவுகள் எங்கே, இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்” என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



# செம்மணி புதைகுழிகளை நோக்கி





## ஈழத்தமிழர் அரசியல் நகர்த்தப்பட வேண்டும்?

பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்

இலங்கை தீவின் அரசியல் இனப்படுகொலை என்று சொல் நீண்ட துயரத்தையும் நெருக்கடியையும் தந்திருக்கின்றது. ஈழத்தமிழர்களின் அரசியல் முழுவதும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் வடிவத்தினாலேயே அதிகம் நகர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய கொடுமையான இனப்படுகொலை அரசியலுக்குள்ளால் கடந்த 75 வருடங்கள்; எதிர்கொண்ட ஈழத் தமிழர்கள் செம்மணி விவகாரத்தையும் சமகாலத்தில் மீளவும் நினைவு கொள்வதோடு நகர்வதாகவே தெரிகிறதுஇ. இது ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலை என்பதை நிறுவுவதற்கான இன்னொரு ஆதாரமாக கிடைத்திருக்கிறது. ஒரு நீண்ட வரலாறு முழுவதும் இலங்கைத் தீவின் இருப்பு எதோவொரு அடிப்படையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற இனப்படுகொலை அரசியலாக காணப்படுகிறது. செம்மணியில் அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் ஈழத்தமிழர் உடைய அரசியல் வரலாற்றில் இனப்படுகொலைக்கான ஆதாரங்களை வெளிப்படுத்துவதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகிறது. வடக்கு கிழக்குக்குள்ளும் வடகிழக்கு வெளியையும் இவ்வகை படுகொலைகளுக்கான ஆதாரங்கள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



9 ஆம்பக்கம் தொடர்ச்சி→

## பட்டலந்த..

இரவில் அனுப்பப்படும் உடல்கள் செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு முன்னூறு முதல் நானூறு வரையான புதைகுழிகளை என்னால் காண்பிக்க முடியும்' எனக்குறிப்பிட்டிருந்தார். சோமரத்ன ராஜபக்ஷவுடன் மற்றுமொரு குற்றவாளியான ஏ.எம். பெரேராவும் தனது வாக்கு மூலத்தில் மனிதப்புதைகுழி விவகாரத்தை ஒப்புக்கொண்டிருந்தார். ஒரே புதைகுழியில் மட்டும் 25 முதல் 30 வரையான சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன என பல தகவல்களையும் தெரிவித்திருந்தார்கள். எனினும் அரசாங்கம் செம்மணி மனிதப்புதைகுழி விவகாரத்தை கிருஷhந்தி படுகொலை விவகாரமாக சுருக்குவதற்கான நகர்வுகளையே முன்னெடுத்திருந்தது. மனிதப்புதைகுழி நிரூபிக்கப்படுவது, இனப்படுகொலையின் கொலைக்கான எண்ணம் (Intention) இருப்பதை உறுதி செய்வதாக அமையக் கூடியதாகும். ஆதலாலேயே இலங்கை அரசாங்கமும் மனிதப் புதைகுழியை படுகொலையாக சுருக்க ஆர்வம் காட்டியது.

குற்றம் நிரூபிக்கப்பட்ட இராணுவத்தினரின் ஒப்புதல் வாக்குமூல வெளிப்பாடுகளைத் தொடர்ந்து கணிசமாக அதிகரிக்கப்பட்ட சர்வதேச மற்றும் உள்ளூர் அழுத்தங்களுக்கு பதிலளிக்கும் விதமாகவே இலங்கை அரசாங்கமும் புதைகுழிகளை ஆராய்வதற்கான முன்முயற்சிகளுக்கு இணங்கியது. இம்முயற்சி முற்றிலும் ஒரு விளம்பர நடவடிக்கை என்பதை நாளடைவில் ஏற்படுத்தப்பட்ட காலதாமதம் உறுதிப்படுத்தியது. அதேவேளை 1996-1998களில் செம்மணி சோதனைச் சாவடிக்கு நேரடிப் பொறுப்பில் இருந்த இராணுவ அதிகாரிகளான பிரிகேடியர் ஸ்ரீலால் வீரசூரிய மற்றும் அவருக்குக் கீழ் இருந்த பிரிகேடியர் ஜனக பெரேரா ஆகியோர் 1999ஆம் ஆண்டு இராணுவத் தளபதியாகவும் துணைத் தலைமைத் தளபதியாகவும் பதவி உயர்வு பெற்றிருந்தனர். வாக்குமூலம் வழங்கப்பட்டு பத்து மாதங்களுக்குப் பிறகே அகழ்வுப் பணிகள் தொடங்கப்பட்டது. மனிதப் புதைகுழியினை அகழ்வதற்கு நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், யாழ் நீதவான் நீதிமன்ற விசேட நீதிபதியாக நியமிக்கப்பட்டார். செம்மணி மனிதப் புதைகுழி 1999ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 2000ஆம் ஆண்டு பங்குனி 27ஆம் திகதி வரையான ஒன்பது மாதங்கள் நடைபெற்றன. அக்காலப்பகுதியில் செம்மணியில் 25 புதைகுழிகள் தோண்டப்பட்டு 16 சடலங்கள் மீட்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட 16 பேரினது சடலங்களும் அடித்துக் கொலை செய்யப்பட்டவை என செம்மணி புதைகுழியின் விசேட நீதிபதி திரு மா.இளஞ்செழின் மரண விசாரணை தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். எனினும், அவர்கள் அடையாளப்படுத்திய 10 புதைகுழிகளில் சடலங்கள் இருக்கவில்லை. இது பத்து மாத கால தாமதத்தின் மீது பொதுமக்களிடையே சந்தேகங்களை உருவாக்கியது. 16 சடலங்களில் அடையாளம் காணப்பட்ட இரண்டு உடல்கள் 1996இல் காணாமல் போன ஆண்கள் என அடையாளம் காணப்பட்டது. இதையடுத்து ஏழு இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. எனினும் வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு சில மாதங்களின் பின்னர் ஏழு பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், முடக்கப்பட்ட அவர்களுடைய கடவுச்சீட்டும் மீள ஒப்படைக்கப்பட்டது. பின்னாட்களில் இராணுவ உயர் பதவிகளையும் பெற்றிருந்தார்கள்.

1999-2000ஆம் ஆண்டு செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வில் பேராசிரியர் சந்திரசிறி நேரியெல்லா தலைமையிலான தடயவியல் நிபுணர்கள் குழு, தங்கள் அறிக்கைகளை சட்டமா அதிபர் துறையிடம் சமர்ப்பித்திருந்தது. எனினும் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர எந்த தீவிர நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுபோன்ற விடயங்களுக்குப் பொறுப்பான நிறுவனமான சட்டமா அதிபர் அலுவலகம், நடவடிக்கைகளில் நீண்ட தாமதத்திற்கு எந்த காரணத்தையும் தெரிவித்திருக்கவில்லை. 2006ஆம் ஆண்டு செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கில், 'புதைகுழிகள் தோண்டி எடுக்கப்பட்ட ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும், சட்டமா அதிபர் துறையிலிருந்து எந்த அறிவுறுத்தலும் வராததால், வழக்கைத் தொடர முடியவில்லை' என்று மட்டுமே காவல்துறையினரால் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க முடிந்தது. இந்த நிலைமை சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பு குறித்த தீவிரமான கவலைகளையே எழுப்பியுள்ளது.

ஆட்சி மாற்றங்கள் ஒவ்வொன்றின் போதும் குறைந்தபட்ச விசாரணை முன்னேற்றங்களையாவது எதிர்பார்த்து செம்மணி விவகாரம் நகர்த்தப்பட்டு வந்துள்ளது. 2015ஆம் ஆண்டு ரணில்-மைத்திரி தேசிய அரசாங்க காலப்பகுதியில் நாவற்குழி இராணுவ முகாம் அதிகாரியால் கைது செய்யப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்கள் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்கில் 1996ஆம் ஆண்டு நாவற்குழி இராணுவ முகாமிற்கு பொறுப்பாகவிருந்த மேஜர் ஜெனெரல் துமிந்த கெப்பட்டி வெலான சார்பில் சட்ட மா அதிபர் அலுவலகம் ஆஜராகியிருந்தது. மேலும், நீதிமன்ற வாளாகத்தில் வைத்தே மனுதாரர்கள், சட்டத்தரணிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமரவடிவேல் குருபரன் தனது விரிவுரையாளர் பதவியை இராஜினாமா செய்ததன் பின்னனியிலும் நாவற்குழி வழக்கு தொடர்புறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தப்பின்னணியில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இதயத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் உருவாக்கப்பட்ட ரணில்-மைத்திரி தேசிய அரசாங்க காலப்பகுதியிலும் செம்மணி விவகாரம் எவ்வித முன்னேற்றங்களையும் அடையமுடியவில்லை.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மாற்றம் பற்றிய பிரச்சாரங்களுக்கு சவால் விடும் வகையில் செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் மீள் உரையாடலை பெற்றுள்ளது. இது எதேர்ச்சையாக ஏற்பட்ட செயலாகவே அமைகின்றது. கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் செம்மணி-சிந்துபதி பகுதியில் உள்ள இந்து மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து மனித என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டதிலிருந்தே செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் மீள் உரையாடலுக்கு வந்துள்ளது. நீதிமன்ற உத்தரவிற்கு அமைய நடைபெறும் அகழ்வுப் பணியில் தற்பொழுது வரை 19 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ் அகழ்வில் எவ்வித ஆடை எச்சங்களும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் சித்திரவதைப்படுத்தப்பட்டு ஆடைகள் களையப்பட்டு நிர்வானமாக புதைக்கப்பட்டிருப்பார்களென சந்தேகிக்கப்படுகின்றது. ஜூன்-8அன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் அந்த இடத்தை ஒரு வெகுஜன புதைகுழியாக முறையாகவும் அங்கீகரித்துள்ளது. எனினும், மனிதப் புதைகுழி உள்ள பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை எனவும் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கும், சட்ட மருத்துவ அதிகாரி விடயங்களை செயற்படுத்துவதற்கும் போதுமானளவு நிதி இல்லை என்றும் சொல்லப்படுகின்றது. எனினும் செம்மணி-சிந்துபதி மனிதப் புதைகுழி ஏற்படுத்தியுள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச அழுத்தங்களின் தொடர்ச்சியாக அரசாங்கம் தவிர்த்து செல்ல முடியாத நிலையில் நகர்த்தி செல்கின்றது. எனினும் அதன் முக்கியத்துவம் சார்ந்த போதிய கவனக்குவிப்பு உருவாக்கப்படவில்லையே என்ற சந்தேகங்களும் காணப்படுகின்றது.

பட்டலந்த அறிக்கை விவகாரம் மீள் உரையாடலை பெற்ற போது முழு இலங்கையும் அதனை முதன்மைப்படுத்தியிருந்தது. அரசாங்கமும் பட்டலந்த அறிக்கையை இரு தசாப்தங்களுக்கு பின்னர் தூசுதட்டி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. அறிக்கையினை வாசிக்கையில் எழுத்தில் பொதிக்கப்பட்டுள்ள சித்திரவதைகளை கேட்டு சபாநாயகர் கண்ணீரும் வடித்திருந்தார். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகளில் காட்சிகளாகவே என்புக்கூட்டுத் தொகுதிகள் வெளிவருகின்றது. கூட்டு கூட்டாக பெற்றோர்-பிள்ளைகள், இணையர்கள் என என்புக்கூடுகள் வெளிவருவது ஆளும் அரசாங்கத்திற்கு கரிசனையை ஏற்படுத்தவில்லை. தென்னிலங்கை ஊடகங்களும் பெருமளவில் செம்மணி மனிதப்புதைகுழி செய்திகளை இருட்டடிப்பு செய்வதாகவும் தவிர்த்து செல்வதாகவுமே அமைகின்றது. இவை இலங்கை இரு தேசம் என்பதனையே மீள மீள உறுதி செய்கின்றது.

இப்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீதான கேள்வி என்னவென்றால், கடந்த காலத்தை மீண்டும் ஒருமுறை வெளிக்கொணர்ந்து செம்மணியை சாத்தியமாக்கிய அரசியலுக்கு இறுதி தீர்ப்பு வழங்குமா அல்லது மீண்டும் கடந்த அரசாங்கங்களைப் போல் இழுத்தடிப்பு செய்யுமா என்பதுதான். எனினும் கடந்த கால இனவாத செயற்பாடுகளுக்கும் பொறுப்பு கூறுவதை தவிர்ப்பதனையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் வழக்கமாக கொண்டுள்ளது. குறிப்பாக தையிட்டி விவகாரத்தில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்ட பௌத்த விகாரைகளுக்கு பதிலீடாக காணிகள் மற்றும் நஷ்டஈடுகள் வழங்குவது பற்றியே உரையாடப்படுகிறது. மாறாக ஆக்கிரமிப்பு இனவாதிகளுக்கு எதிராக எவ்வித நீதிப்பொறிமுறைகளையும் பரிந்துரைப்பதாக அமையவில்லை.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# மூன்று நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ள ஈரான்!

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்சுக்கும் ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளதாக ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஈரானிய தாக்குதல்களுக்கு மத்தியில் இஸ்ரேலைப் பாதுகாக்க மூன்று நாடுகளும் நடவடிக்கை எடுத்தால், மூன்று நாடுகளுக்கு சொந்தமான பிராந்தியத்தில் அமைந்துள்ள கப்பல்கள் மற்றும் இராணுவத் தளங்களை குறிவைத்து தாக்குதல்களை நடத்துவோம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

இதற்கிடையில், ஈரானில் உள்ள ஒவ்வொரு இடத்தையும், ஒவ்வொரு இலக்கையும் தாக்குவோம் என்று இஸ்ரேலியp பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகும் எச்சரித்துள்ளார்.

அதேநேரம் இஸ்ரேல் இதுவரை நடத்திய தாக்குதல்களில் 20 ஈரானிய இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், 15aஆம் திகதி நடைபெறவிருந்த ஈரான் மற்றும் அமெரிக்கா இடையேயான அணுசக்தி பேச்சுவார்த்தைகள் இரத்து செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தராக இருக்கும் ஓமானிய வெளியுறவு அமைச்சர் பத்ர் அல்புசைத், ஞாயிற்றுக்கிழமை மஸ்கட்டில் நடைபெறவிருந்த ஈரான்-அமெரிக்கா பேச்சுவார்த்தைகள் நடைபெறாது என்று



எக்ஸ் கணக்கில் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில், இந்த விடயத்தில் கருத்து தெரிவித்த ஈரானிய வெளியுறவு அமைச்சர், அமெரிக்காவுடன் அணுசக்தி பேச்சுவார்த்தை நடத்துவதை நியாயப்படுத்த முடியாது என்றும் கூறியுள்ளார்.

இருப்பினும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், ஈரானை அணுசக்தி ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறும் இல்லையெனில் எதிர்காலத்தில் மேலும் சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்றும் கூறியுள்ளார். இதுவரை, அமெரிக்காவும் ஈரானும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஓமானின் மத்தியஸ்தத்தில் ஐந்து சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

---

3 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## பதவியில் உயிர்..

தின் போதும் அதற்குப் பின்னரும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்களான எங்கள் போராட்ட பயணம் 3036ஆவது நாளாக தொடர்கிறது.

எங்கள் குழந்தைகளை கண்டுபிடிக்க வேண்டுமென்ற தவிப்போடு மட்டுமன்றி, இனப்படுகொலையிலிருந்து எதிர்காலத் தலைமுறையினரைப் பாதுகாக்கவும் தமிழர் இறையாண்மைக்கு சர்வதேச ஆதரவைக் கோரவும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் அழைப்பு விடுக்கிறோம். அரசியல் தீர்வு ஒன்று தேவை என யுத்தத்தின் போது இலங்கை அரசுக்கும் அதன் பின்னணியில் இருந்த பங்களிப்பாளர்களுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியது. ஆனால், இன்று வரை எந்தத் தீர்வும் இல்லை. எங்கள் கண்ணீர் மட்டும் தொடர்கிறது.

இன்று அமைதிக்குப் பதிலாக, இலங்கையின் வடக்கு - கிழக்கு இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. புலனாய்வு அமைப்புகள், பொதுமக்களின் வாழ்க்கையை ஆதிக்கம் செலுத்துகின்றன. அதே நேரத்தில் அரசுடன் தொடர்புடைய போதைப்பொருள் வலையமைப்புகள் மற்றும் பாலியல் சுரண்டல் தமிழ் இளைஞர்களையும் பெண்களையும் அச்சுறுத்துகின்றன.

நாங்கள் தமிழ் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை வைக்கவில்லை. அவர்களின் ஒரே குறிக்கோள் பதவியில் உயிர் வாழ்வது என்று தெரிகிறது. அவர்கள் எந்த தொலைநோக்கு பார்வையையும், தைரியத்தையும், சர்வதேச ஈடுபாட்டின் மூலம் இறையாண்மையைப் பெற்ற பிற ஒடுக்கப்பட்ட நாடுகளிடமிருந்து கற்றுக்கொள்ள எந்த முயற்சியையும் காட்டவில்லை. அவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தை பொறுப்பேற்க வைக்கவோ அல்லது போருக்குப் பிறகு தமிழ் மக்கள் அனுபவித்த துரோகத்தை சர்வதேச சமூகத்துக்கு நினைவூட்டவோ தவறிவிட்டனர். எனவே, தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள ஒவ்வொரு தமிழரும் எழுந்து சர்வதேச ஈடுபாட்டைக் கோர வேண்டும் என்றும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

தமிழர் இறையாண்மை மட்டுமே தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும், முழுக் குடிமக்களுக்கும் நிலையான அமைதியை கொண்டு வரும்- என்றனர்.

---

2 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## பதவி வெறியர்களின்..

தங்களது சுயநல உள்நோக்கங்களுக்காக, அரசின் பக்கமே திரும்பியுள்ளன. இந்நிலையில், தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம், இதனை ஒரு திருப்புமுனையாக கருதி, தமிழரின் உண்மையான தேசப்பற்றைப் பாதுகாக்கும் கடமையை இளைஞர்கள் மீண்டும் தோளில் எடுத்துக்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது எனக் கோருகிறது. மாவீரர்களதும் இந்த மண்ணிற்காக மறைந்த பொதுமக்களினதும் தியாகங்களை மதிக்கும் ஒரு புதிய அரசியல் காலாச்சாரம் உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் கருதுகின்றது.

தமிழ்த் தேசியப் பற்றுக் கொண்ட, கொள்கை உறுதியான, ஊழலற்ற, பொறுப்புணர்வான இளைஞர்கள் புதிய அணியாக ஒன்றுதிரள வேண்டும். அவர்கள் தமிழ்த் தேசிய அரசியலை சீர்ப்படுத்தும் புதிய தலைமுறையாக உருவாக வேண்டும். தமிழ்த் தேசியத்தின் மீது மக்களிடம் இன்னும் உள்ள எஞ்சியுள்ள நம்பிக்கையை முழுமையாக அழிக்கும்விதமாக செயல்படும் தற்போதைய அரசியல் தலைவர்கள், தங்கள் தவறுகளை உணரச் செய்ய வேண்டும். அவர்கள் மக்களின் எதிர்வினைகளை எதிர்கொள்ளத் தயார் இருக்க வேண்டும். இல்லையெனில், புதிய தலைமுறை இளைஞர்கள் ஒன்றுதிரண்டு உண்மையான தமிழ்த் தேசியத்தை மீட்டெடுக்கும் புதிய பயணமொன்றைத் தொடங்குவார்கள் – என்று தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

14 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## பட்டலந்த..

இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த கால இனவாதங்களை தவிர்த்து செல்வதை கொள்கையாக கொண்டு செயல்படுவதையே அடையாளப்படுத்துகிறது. இவ்வாறான அணுகுமுறையையே செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்திலும் அரசாங்கம் பின்பற்றுகின்றமையையே செய்திகளும் அரசாங்கத்தின் செம்மணி விவகார தவிர்ப்பும் வெளிப்படுத்துகிறது. இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிராகரித்து வரும் இனவழிப்பு பிரச்சாரத்தின் தொடர்ச்சியாகவே அமைகின்றது. செம்மணி மனிதப் புதைகுழிகள் அரசியல் தீப்பொறியாக மாறுவது இலங்கை அரசின் இனப்படுகொலையை நிரூபிப்பதாக அமையக்கூடியதாகும். எனவே, தென்னிலங்கை இரு தசாப்தங்களுக்கு பின்னர் பட்டலந்த வதை முகாமுக்கு அளித்த முக்கியத்துவத்தைத் கூட செம்மணி மனிதப் புதைகுழி விவகாத்துக்கு வழங்கப் போவதில்லை என்பதுவே நிதர்சனமாகும். எனினும் இவ்நிதர்சனத்துக்கு பின்னால் ஈழத்தமிழ் அரசியல் இழுபட்டு செல்ல முடியாது. சர்வதேச அரங்கில் இனப்படுகொலையை நிரூபிப்பதில் மனிதப் புதைகுழிகள் ஆழமான செல்வாக்கை செலுத்தியுள்ளது. இம்முக்கியத்துவத்தை உணர்ந்து ஈழத்தமிழரசியல் செயற்பாட்டாளர்கள் நகர வேண்டிய தேவை உள்ளது. மனிதப் புதைகுழி வரலாறும் வெறுமனவே செம்மணியுடன் சுருக்கக் கூடியதல்ல. துரையப்பா விளையாட்டு அரங்கு, மிருசுவில், மன்னார், கொக்கு தொடுவாய், கிளிநொச்சி என 21 இற்கு மேற்பட்ட தளங்களில் இனங்காணப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தால் மனிதப் புதைகுழி பட்டியல் இன்னும் அதிகரிக்கலாம். தையிட்டி விகாரை விவகாரத்திலும் இச்சந்தேகம் பொதுப்பரப்பில் முன்வைக்கப்படுகின்றது. தென்னிலங்கை ஆங்கில பத்திரைகையின் கட்டுரை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது போல் செம்மணி-சிந்துபதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள மனித எலும்புகள் உண்மை (Truth), நீதி (Justice), பொறுப்புக்கூறல் (Accountability) மற்றும் நல்லிணக்கம் (Reconciliation) என்பவற்றை கேள்விக்குட்படுத்துவதாக அமைகிறது. இதனைப் பற்றி தமிழ் இனப்படுகொலைக்கான நீதிப் போராட்டத்தை நகர்த்துவது ஈழத்தமிழரசியலின் அர்ப்பணிப்பிலும் சாதுரியத்திலும் தங்கியுள்ளது.

13 ஆம் பக்கம் தொடர்ச்சி→

## செம்மணி..

புதையுண்டுபோயிருக்கக் கூடியன. இது இலங்கைத்தீவின் அரசியல் நாகரிகத்தை அடையாளப்படுத்துகிறது. இக்கட்டுரையும் செம்மணி ஆதாரங்களை ஈழத்தமிழர்கள் முன்னிறுத்தி செயல்பட வேண்டிய தேவைப்பாட்டை உணர்த்துவதாக அமையவுள்ளது.

செம்மணியில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட 18 எலும்புக்கூடுகளும் அதிக அதிர்ச்சியையும் வேதனையையும் ஈழத்தமிழர் மத்தியில் தோற்றுவித்துள்ளது. கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளின் வடிவத்தை வைத்துக் கொண்டு அவை எதிலும் ஆடைகள் அணிகலன்கள் எதுவும் அற்ற நிலையில் புதைக்கப்பட்டது என்பது நிரூபணமாகியுள்ளது. இதன் வடிவங்களை சட்ட மருத்துவ அதிகாரிகளும் நீதிமன்றமும் சட்டவாதிகளும் ஊடகங்களுக்கு வெளிப்படுத்துகின்ற தகவல்களை வைத்து பார்க்கின்றபோது அதன் உண்மை தன்மை வெளிப்படுகின்றது. அதேபோன்று அப்படுகொலையோடு தொடர்புபட்ட இணுவக் குற்றவாழியான சோமரத்ன ராஜபக்~ நீதிமன்றில் தெரிவித்த ஒப்புதல் வாக்கு மூலமும் அத்தகைய படுகொலையின் உண்மைத்தன்மையை உணர்த்துகிறது. குழந்தைகள் மற்றும் கைக்குழந்தைகளோடு கூட்டு தொகுதியாக மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அத்தகைய படுகொலையின் உண்மை தன்மையை மேலும் உறுதிப்படுத்துகின்றது. இது வெளிப்படையாகவே இனப்படுகொலை என்பதையும் திட்டமிடப்பட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட படுகொலை என்பதையும் உணர்த்துகிறது. இவர்கள் போரிலோ போரின் எல்லைகளிலோ ஆயுதங்களோடு பயணித்தவர்களையோ கிடையாது. அதனால் இது ஓர் இனப்படுகொலை என்பதற்கான ஆதாரங்களை கொண்டிருக்கிறது. அல்லது உறுதிப்படுத்துகிறது. தமிழர்கள் என்பதற்காகவும் வீதியால் பயணித்தவர்கள் என்பதற்காகவும் காணாமல் போனவர்களை தேடியவர்கள் என்பதற்காகவும் வியாபார அனுமதிப் பத்திரம் கோரியவர்கள் என்பதற்காகவும் படுகொலை செய்யப்படபட்டவர்கள். அவ்வாறெனில் இது திட்டமிடப்பட்டு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்பட்ட படுகொலையாகவே உள்ளது. இது சார்ந்து நீதிமன்றங்களும் சட்டவாதிகளும் சட்ட வைத்திய அதிகாரிகளும் முன்வைக்கும் கருத்துக்கள் ஒரு புறம் அமைய மறுபக்கத்தில் இதன் அரசியல் முக்கியத்துவத்தையும் ஈழத்தமிழர்களின் அரசியலில் இவ்வகை துயரங்கள் நீண்டது என்பதை ஆதாரங்களோடு வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. அதனை நோக்கி ஈழத்தமிழ் அரசியல் சமூகத் தரப்புகள் கவனத்தில் கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாது. ஆதனை விரிவாக நோக்குவது அவசியம்.

முதலாவது செம்மணி விவகாரம் பொறுத்து ஈழத்தமிழர்கள் மத்தியில் அதிக கவனம் செலுத்தப்படுவதாக தெரியவில்லை. துயரங்களை மட்டும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனரே அன்றி அதனைக் கடந்து செயல்பாடுகள்ல் கவனம் கொள்வதைக் காணமுடியவில்லை. இவ்வாறே இறுதிக்கட்ட போர் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற போது வடக்கு கிழக்கின் ஏனைய பிரதேசங்களில் எந்தவித கவனமும் கொள்ளாது எந்தகைய எதிர்ப்பு இன்றி மௌனமாக இருந்தது போன்றே செம்மணி விவகாரத்தில் மௌனம் காத்து வருகின்றதை அவதானிக்க முடிகிறது. இதன் விளைவுகள் ஒட்டுமொத்தமாக இனத்தின் அடையாளத்தை இருப்பையும் பலவீனப்படுத்தக் கூடியது அரசியல்வாதிகள் கதிரைகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் போராடிக் கொண்டிருக்கிறார்களே அன்றி ஈழத்தமிழர்களின் அடிப்படையானதும் ஆதாரங்களை உறுதிப்படுத்தக் கூடியதுமான செம்மணி போன்ற விடயங்களில் கவனம் கொள்வதில் தவிர்த்து வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து ஒரு எதிர்ப்பு போராட்டத்தை நிகழ்த்தியோடு(யூன்5.2025) தொடர்ச்சியாக காணாமல் ஆக்கப்பட்டோர் மட்டுமே சர்வதேச கண்காணிப்புக்குள் செம்மணி விடயம் கையாளப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்து வருகின்றனர்.; யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்களுமே அதிக கரிச்சனை கொண்டிருக்கின்றனர். அன்றி சாதாரண சிவில் பரப்பில்; அது ஒரு முக்கியத்துவம் பெற்ற விடயமாக கருதப்படதாக தெரியவில்லை. அதனுடைய தனித்துவத்தையும் அதனுடைய அவசியத்தையும் அதனால் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் கருத்தில் கொள்ளுகின்ற திராணி ஏனைய எந்த தரப்பிடமும் காணப்படவில்லை. ஆனால் இறுதிக் கட்ட போருக்கான சர்வதேச விசாரணை வேண்டுமென்றும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை என்பதை ஆதாரப்பூர்வமாக நிறுவுவதற்கான



வாய்ப்பு செம்மணியில் கிடைத்துள்ளது. அதனை சரிவர பிரயோகப்படுத்துவதும் அதனை சட்டதரப்புகளோடு சேர்ந்து நீதிமன்றங்களோடு சேர்ந்து அதனை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு வடக்கு கிழக்கில் இருக்க அனைத்து தமிழர்களுக்கும் உரிய கடப்பாடாகும்.

இரண்டாவது அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை எந்தவிதமான கரிசனையும் கொள்ளாது செயல்படுகின்ற போக்கை செம்மணி விடையத்திலும் அவதானிக்க முடியகிறது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பராளுமன்றத்தில் நீதி அமைச்சுக்கு முன்னே எழுப்பிய கேள்விகளை தவிர பொது அரங்கில் அரசியல் தலைவர்கள் பெருமளவில் செம்மணி விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததாக தெரியவில்லை. தமிழரசுக் கட்சியின் தற்காலிக பொதுச் செயலாளர் ஊடகங்களோடு உரையாடும் போது ஏனைய விடயங்களில் ஓர் அம்சமாக கடந்து செல்ல முயல்கிறதைக் கண்டு கொள்ள முடிகிறது. இதன் தாற்பரியம் எது என்பதை உணரக் கூடிய தரப்புகள் அரசியல் கட்சிகள் அவற்றினுடைய உறுப்பினர்கள் தொண்டர்கள் இதற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். தொடர்ச்சியாக செம்மணி விடயத்தை சர்வதேச விவகாரங்களுக்குள் உட்படுத்தப்படுவது மட்டுமின்றி அதனூடான ஈழத்தமிழர் உடைய அரசியலின் இருப்புக்கான வாய்ப்புகளை திறந்து விடுதல் வேண்டும். பிரித்தானிய வரலாற்றில் முடியாட்சியாளனான ழுடிஎயச ஊசழஅறநடட என்பவர் கொல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டு எலும்புக்கூடான அவரை தோண்டி எடுத்து அவ் எலும்பு கூட்டுக்கு மரண தண்டனை விதித்த வரலாற்று பதிவு ஒன்று உலகத்தில் அனுபவத்தில் உண்டு. அத்தகைய அனுபவங்களை கவனத்தில் கொள்ள வேண்டிய தேவைப்படும் ஈழத்தமிழர் அரசியல் அவசியமானது. ஈழத்தமிழர் ஒரு நீண்ட அரசியல் உரிமைக்கான சமத்துவத்துக்கான போராட்டத்தை நிகழ்த்தி உள்ளனர். அதனை அடைவதற்கான வாய்ப்புகள் அவ்வப்போது கிடைக்கின்ற சந்தர்ப்பங்கள் அதனை தெளிவாக பயன்படுத்துகின்ற அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் இதன் மீது கவனம் கொள்ள வேண்டிய ஒரு தேவைப்பாடு எழுந்திருக்கிறது. அவ்வாறு செயல்படுகின்ற சந்தர்ப்பத்தில் மட்டுமே மாற்றத்தை அடைய முடியும். அரசியல்வாதிகள் தமக்குள்ளும் தமது அதிகாரத்துக்குள்ளும் போட்டியிட்டுக் கொண்டிருக்கிறார். அவர்களது செயல்பாடுகளை திசை திருப்புவது என்பது சிவில் அமைப்புகளாலும் மக்களாலும் புலமை சார்ந்திருக்க கூடிய தரப்புகளாலும் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயமாகும். அரசியல்வாதிகளுடைய அணுகுமுறைகள் அவ்வாறானது என்பதை புரிந்து கொண்டு அதற்கு மாற்றான செய்முறைகளை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு ஏற்படுத்துகின்ற பட்சத்தில் மட்டுமே அரசியல் ரீதியான தீர்வை நோக்கி ஈழத்தமிழ் சமூகம் செல்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.

எனவே ஈழத்தமிழர்களின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் கடந்த கால வரலாறு முழுவதும் இலங்கை தீவில் எத்தகைய துயரம் மிக்க வலிகளை ஈழத்ததமிழர் சந்தித்துள்ளார்கள் என்பதையும் வெளிப்படுத்த செம்மணி விவகாரம் கிடைத்துள்ளது.; அதற்கான வாய்ப்பினை நகர்த்த நீதிமன்ற ஒத்துழைப்பும் சட்டத்தின் ஆதரவும் முழுமையாக காணப்படுகிறது. அத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு செம்மணி விவகாரத்தை மேல்நிலைக்கு கொண்டு செல்லுதல் அவசியமானது. ஈழத்தமிழர்கள் முள்ளிவாய்க்கால் போன்று துயரம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றபோது மௌனம் காத்து விட்டு பின்னர் உரையாடுவதில் எந்தப் பயணம் கிடையாது. இது ஒரு வாய்ப்பான சூழலை நீதித்துறையும் சட்டத்துறையும் வழங்கி இருக்கின்றது. அதனை முதன்மைப்படுத்திக் கொண்டு அரசியல் ரீதியான அணுகுமுறைகளை தெளிவான கட்டமைப்புகளுக்குள்; கொண்டுவந்து செயல்படுத்த வேண்டும். செம்மணி விடயம் உறுதிப்படுத்தப்பட்ட வலுவான ஆதாரங்களில் ஒன்று. அத்தகைய ஆதாரத்தை முன் கொண்டு செல்வது ஈழத்தமிழர் அரசியல் எதிர்காலத்துக்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்தக் கூடியது. இது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்திற்கும் பொறுப்புள்ளது என்பதை உணர வேண்டும். கொல்லப்பட்ட தமிழர்களை நினைவு கொள்ளும் மக்களுக்கு பொறுப்புடையதாக அரசாங்கம் செயல்பட வேண்டும். ஆயுதப் போராட்டத்திழன் போது ஜே.வி.பிக்கு வழங்கப்படும் மற்றும் வழங்கப்பட்ட நியாயாதிக்கத்தை ஈழத்தமிழர் கோருவது ஒன்றும் தவறில்லையே.